உ

சிவமயம்

# அருள் ஒளி




## திருநாவுக்கரசு நாயனார் குருபூசை

# சிறப்பு மலர்

வெளியீடு
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
இலங்கை
2007

சித்திரை இதழ்


மலர் 54



யாழ் மாவட்ட கலாசாரப் பேரவையின் தேசியகலை இலக்கிய விழா
நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்றது.
விழாவில் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி முதன்மையுரை ஆற்றும் காட்சி



கொழும்பில் பலவருட காலமாக ஆன்மீகப் பணியாற்றிவருபவரும்
கொழும்பு சாரதா அன்னையார் ஆச்சிரமத்தை ஸ்தாபித்தவருமாகிய
செல்வி. வ.கணபதிப்பிள்ளை அன்னையின் தெய்வீகத் தொண்டை வாழ்த்துகிறோம்.
அன்னையின் அயராத தொண்டினால் நவீன வசதிகளைக் கொண்ட
முதியோர் இல்லம் வெள்ளவத்தையில் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



உ

# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்:
செஞ்சொற்செல்வர்
திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்:
சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்

2007 விய வருடம் சித்திரை, வைகாசி

மலர் 54

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை. பதிவு இல, QD/74/NEWS/2006Y}


## திருக்கோவில்கள் நீர்வளம் காத்த இறைபணியைத் தொடர்வோம்

எம் முன்னோர்கள் மக்களுக்கு தேவையான விடயங்களை திருக்கோவில்களில் கடவுளின் பெயரால் காத்து வந்தனர். உயிரினங்களின் வாழ்வுக்கு அவசியமான அனைத்தையும் ஆலயங்களை மையமாகக் கொண்டு பேணினர். பஞ்சபூதங்களில் ஒன்றாகிய தண்ணீர் தாகத்தைத் தீர்ப்பதோடு பாவத்தையும் கழுவும் தீர்த்தமெனக் கருதி பாதுகாத்தனர். ஆலயச் சுற்றாடலில் குளங்களையும், கேணிகளையும் தோற்றிவித்துப் பாதுகாத்தனர். வயல் நிறைந்த கிராமங்களில் இறந்தவர்களின் பெயரில் பிதிர்க்கடனாக பல குளங்களையும் தூர்வைகளையும் (தூரவு) கேணிகளையும் வெட்டினர். மழை வளத்தைப் பேணி நில வளத்தைப் பெருக்குவதற்கு இவை பெரிதும் துணை செய்தன.

ஈழத்திலும் இந்தியாவிலும் ஆத்மீகத்தின் பெயரால் நீர்வளம் காப்பாற்றப்பட்ட பெருமை சிறப்புக்குரியதாகும். ஈழத்தில் தமிழ்வேந்தர் ஆட்சிக்காலப் பகுதியில் பல குளங்கள் புனர் நிர்மாணம் செய்யப்பட்டும் புதிதாகத் தோண்டப்பட்டும் சமூகப் பொறுப்புணர்வோடு நீர்வளம் பாதுகாக்கப்பட்டது. இயற்கை வளத்தைக் காப்பது இறைபணியில் உன்னதமானது என எம்முன்னோர்கள் உணர்ந்த அளவுக்கு இன்று நாம் இல்லை.மனிதர்களின் தாகத்தைத் தீர்ப்பதற்கு மட்டுமன்றி ஆடு மாடுகள் போன்ற உயிரினங்களின் தாகத்தைத் தீர்ப்பதற்கும் தண்ணீர்த் தொட்டிகள் ஏராளம் கட்டப்பட்டன. இன்று மழை நீரைப் பாதுகாக்கும்

முயற்சியில் ஆன்மீகம் சார்ந்த முயற்சிகள் போதமாமல் உள்ளது. பல குளங்கள் பராமரிப்பு இன்றி சீரற்று தூர்ந்து போயுள்ளன. நல்லூருக்குரிய பிரசித்தமான யமுனா ஏரிக் குளம் முதல் பல திருக்கோவில் குளங்கள் ஏரிகள் கவனிப்பாரற்று உள்ளன. பல திருக்கோவிகளின் கேணிகள் மூடப்பட்டுவிட்டன.

யாழ் மாவட்டத்தில் 1047 குளங்கள் வெட்டப்பட்டு பாவனையில் இருந்ததாக அரசாங்கப் பதிவில் உள்ளது. தென்மராட்சியில் 417 குளங்கள் பொதுமக்களால் முற்காலத்தில் வெட்டப்பட்டுள்ளது. நல்லூர் பிரதேச செயலக பிரிவில் கோயில்களின் பெயரால் 26 குளங்கள் உள்ளன. இன்று ஆலயங்களின் பெயரால் வெட்டப்பட்ட குளங்கள் அனாதரவாக அழிந்தெழிந்து போயுள்ளன. யாழ்குடாநாட்டில் நீர்வளம் குறித்து நல்ல பௌதீக ஆராட்சியாளர்கள் எச்சரிக்கை செய்த வண்ணம் உள்ளனர். நீர்வளம் சீராகப் பாதுகாக்காவிட்டால் யாழ்குடாநாடு விரைவில் பாலைவனமாகி விடும் என பௌதீகத்துறை சார்ந்த வல்லுநர்கள் எச்சரிக்கை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இயற்கைச் சீற்றத்தால் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் விளைவாக வடமராட்சிப் பகுதியில் பல கிணற்று நீர் உவர் நீராக மாறியுள்ளமை யாவரும் அறிந்ததே. தென்மராட்சியில் பல நன்னீர் ஊற்றுக்கள் முற்றாக வற்றியுள்ளமை நாம் செய்த வினைப்பயனோ என எண்ணத் தோன்றுகிறது. நீர்வளத்தைப் பாதுகாப்பதில் அரசு அக்கறை கொள்ளும் எனக் கருத முடியாது. மனித உயிர் வளத்தையே மதிக்காத நிலையில் பௌதீக வளங்களை அவர்கள் பாதுகாப்பது என்பது வெறும் கனவு.

எனவே எமது நீர் வளத்தைப் பாதுகாப்பதில் ஆன்மீக ரீதியில் நாம் அக்கறை கொள்ளல் வேண்டும். கோவில்களின் பெயரால் அமைந்த குளங்கள் புனர் நிர்மாணம் செய்யப்பட வேண்டும். கேணிகள் மழை நீரை சேகரிப்பதற்கு பயன்பாடுடையதாக்குதல் வேண்டும். மழைநீரை கடலுக்கு வீணாக செல்லாது எம் மண்ணை மகிமைப்படுத்த அரண்கள் அமைத்தல் வேண்டும். ஆலயங்கள் சமய நிறுவனங்கள் இவ்விடயம் தொடர்பாக அக்கறை கொள்ளுதல் இன்றைய காலத்தின் கட்டாய தேவையாகவுள்ளது.

**— ஆசிரியர்**

# பசுவதை

திரு பொ.கந்தையா அவர்கள்
(காந்தி ஆசிரியர்)
திருகோணமலை

பசுவைத் தெய்வமாக வழிபடுகிறோம். அதற்கு பொங்கல் செய்கிறோம். பொட்டிட்டு மாலை போடுகிறோம். அதன் சாணியை விபூதியாக்கி சமயச்சின்னமாக அணிந்து கொள்கின்றோம். எருத்து மாடுகளை வயல் உழவும், வண்டி இழுக்கவும் உபயோகப் படுத்துகிறோம்.

தாய்ப் பால் இல்லாத குழந்தைகளைப் பசுத்தாய்தானே பால் கொடுத்து வளர்க்கின்றது. நோயாளிகளையும் முதியோர்களையும் கூடப் பால் கொடுத்துக் காப்பாற்றுகிறது. வெளிநாடுகளிலிருந்து இலட்சக்கணக்காக வந்து சேரும் பால்மாப் பெட்டிகளும் பசுக்களின் கொடைகளே.

பசு சாதுவான மிருகம் என்று எல்லோரும் சொல்லுவார்கள். கொம்பிருந்தாலும் அது மனிதரை இடிப்பதில்லை, மனிதன் கொம்பில்லாமலே மற்ற மனிதர்களை இடிக்கின்றான். கொலையும் செய்கின்றான். மனிதன் மிருகமாக மாறிவிட்டான். பசு சாதுவான பசுவாகவே இருக்கிறது.

பசுவும் கடினமாக உழைக்கும் எருதும், குதிரையும், யானையும்,ஆடும்,மானும் இன்னும் பல மிருகங்களும் தாவர உணவையே உண்கின்றன. பலமான வேலைகளைச் செய்கின்றன. மனிதன் பலத்துக்காக உண்பதாகப் பொய் சொல்லிக் கொண்டு நாக்கின் சுவைக்கு அடிமைப்பட்டு வாய்க்கு உருசிக்காக ஆடுமாடுகளையும் மாமிச உணவுகளையும் சாப்பிடுகிறான். புத்தி சாதுரியத்தினால் தான் உண்பது சரி எனவும் வாதிக்கிறான். இன்னும் மேலே போய்க் கடவுள் தன் பக்கம்தான் என்றும் சொல்லி தன்னையே ஏமாற்றுகிறான்.

மனிதத்தன்மை, மனிதப்பண்பு உள்ளவன் தான் மனிதன், எந்த உயிரையும் கொல்லமாட்டான். மற்றவர் மனம்நோக நடக்கமாட்டான். மாமிச உணவை உண்ணமாட்டான். கோயிலை வழிபட்டு விட்டு நேரேஇறைச்சிக்கடைக்குப் போகின்றவர்களும் இருக்கின்றார்கள். இவர்களுக்கு இரக்கப்பட்டு இவர்களுக்குநல்லறிவை கொடுக்கும் படி இறைவனைக் கேட்டுக் கொள்வோம்.

சைவசமயத்தவர்கள் மாமிசம் புசிக்கக்கூடாது. சொந்த வீட்டில் எதையாவது செய்து பாவத்தைத் தேடிக் கொள்ளுங்கள். பொது விருந்துகளில் மாமிசத்தை சேர்த்துக் கொள்ளாதீர்கள். சைவ விருந்தாக நடாத்துங்கள் என்று பல அன்பர்களிடம் பல சந்தர்ப்பங்களில் பணிவாகக் கேட்டுக் கொண்டேன். எவரும் இணங்கிய பாடில்லை, அதற்கேற்ற துணிவும் இல்லை. அதில்லாமல் என்ன விருந்து எனக் கேட்டவர்களும் உண்டு.

அமெரிக்காவில் இருந்து இங்கு வந்து எங்களுக்கு சைவசமயத்தைப் பற்றியும், சைவ உணவைப்பற்றியும் போதித்து வரும் ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவா அவர்கள்

பசுவதையைப் பற்றி மிகவும் கண்டித்து வருகிறார்கள். மக்கள் பார்வைக்காகப் பல இடங்களில் சுவர்களில் பசுக்களின் முறைப்பாடுகளையும் வேண்டுகோள்களையும் வர்ணப்படங்களாக வரைந்துள்ளார்கள். இச்சித்திரங்கயைப்பார்க்கும் நாம் எமது சித்திரவதைகளை எண்ணி வெட்கமும் துக்கமும் அடைகிறேன்.

வேதநூல்கள், சமயநூல்கள், நீதிநூல்கள், புராண இதிகாசங்கள் எல்லாமே உயிர்க் கொலையையும் மாமிச உணவையும் கண்டித்துள்ளன. எல்லா ஜீவராசிகளும் கடவுளுடைய பிள்ளைகள். அவைகளிடம் அன்புகாட்ட வேண்டும்.

**கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எலலா உயிரும் தொழும்.**

**தன்னூன் பெருக்கற்குத் தான் பிறிதூனண்பானை**
**எங்ஙனம் ஆளும் அருளும் அருள்.**

**- திருக்குறள்**

**காப்பது விரதம்** (உயிர் வதை செய்யாமல் காப்பது நோன்பாகும்)

**– ஆத்திசூடி**

**நோன்பு என்பது கொன்று தின்னாமை**
(மற்ற உயிர்களைக் கொன்று அதன் புலாலை உண்ணாமல் இருப்பதே விரதமாகும்)

**–கொன்றை வேந்தன்**

**புலையும் கொலையும் களவுந் தவிர்**
(புலால் உணவு, உயிர்க்கொலை, திருட்டுத் தொழில் இவற்றை ஒழித்துவிடுவாயாக)

**- கொன்றை வேந்தன்**

**கொல்லாமை எத்தனை குணக் கேட்டை நீக்கும்**
**கொல்லா விரதங் குவலய மெல்லா மோங்க**
**எல்லார்க்குஞ் சொல்லுவதென் இச்சை பராபரமே**
**எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணியிரங்கவும் நின்**
**தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே**
**கொல்லாவிரதமொன்று கொண்டவரே நல்லோர் மற்**
**றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே**
**கொலை களவு கட்காமங் கோபம் விட்டால் அன்றோ**
**மலையிலக்கா நின்னருள்தான் வாய்க்கும் பராபரமே.**

**–தாயுமானசுவாமிகள்**

**கொலைபுரிவார் தவிர் மற்றவரெல்லாம் நமது குலத்தவரே**

**– இராமலிங்கசுவாமிகள்**

**கொலை களவு செய்வாரோடு இணங்க வேண்டாம்**

**- உலகநீதி**

ஊனைத்தின்று ஊனைப் பெருக்காமை முன்னினிதே

–ஆன்றோர்வாக்கு

**பாவங்கள் ஆவன யாவை?**

கொலை, களவு, கள்குடித்தல், மாமிசம் புசித்தல்,பொய் பேசுதல், வியபிசாரம், சூதாடதல் முதலானவை கொலை பஞ்சமா பாதகங்களில் ஒன்றாகும்.

**– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான்**

பசுவதை, பகிடிவதை, சித்திரவதை,மனிதவதை இப்படி எத்தனையோ வதைகள் உள. எல்லாம் மனித குலத்தால் செய்யப்படுபவை. காரணம் அறியாமை. இவற்றைத் தவிர்ப்பதாயின் அறியாமையில் புதையுண்ட பாமர மக்களிடையே அறிவையும், ஆத்மீகத்தையும், ஞானத்தையும்,நீதியையும் புகட்ட வேண்டும். மகாத்மா காந்தியடிகள் மேல் நாடு சென்ற போது தாயார் மூன்ற சத்தியங்களைக் கேட்டு வழியனுப்பினார்கள். காந்தியடிகள் மூன்று சத்தியங்களையம் காத்துத் தாய் நாடு திரும்பிச் சேவை செய்து மகாத்மா எனப் போற்றப்பட்டார்கள். மூன்று சத்தியங்களாவன மது அருந்தமாட்டேன், மாமிசம் புசிக்கமாட்டேன், பிறமாதரை விரும்பமாட்டேன்.

பெற்றோர்களும் ஆசிரியர்களும் பின்வருவன போன்ற சத்தியங்களை மாணவர்களிடம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**மது அருந்த மாட்டோம்**
**மாமிசம் புசிக்க மாட்டோம்**
**பிற மாதரை விரும்ப மாட்டோம்**
**எந்த உயிரையும் கொல்ல மாட்டோம்**
**பசுவதை செய்ய மாட்டோம்**
**பகிடி வதை செய்ய மாட்டோம்**
**பொய் சொல்ல மாட்டோம்**
**களவு எடுக்க மாட்டோம்**
**கோபங் கொள்ள மாட்டோம்**
**தெய்வத்தை இகழ மாட்டோம்**
**தற்கொலை செய்ய மாட்டோம்.**

**அம்மா என அலர ஆருயிரைக் கொன்றருந்தி**
**இம்மானுட ரெல்லாம் இன்புற்றிருக்கின்றார்**
**அம்மா எனுஞ் சத்தம் கேட்டகன்ற மாதவர்க்கும்**
**பொய் மாநிரயமெனில் புசித்தவர்க் கென் சொல்லுவதே.**

**சைவ உணவைப் பேணி சைவசமயத்தைக் காப்போம்**
**இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.**
**ஆனந்தம்**

## உங்கள் அபிமான "அருள் ஒளி" கிடைக்கும் இடங்கள்

அலுவலகம்:
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்,
கோவில் வீதி,
நல்லூர்.

# கடவுளும் நானும்

மூனாக்கானா
ஆரையம்பதி

மண்ணிலே தான் பிறந்த மனிதர் படுந் துயரம்
எண்ணியே நான் வருந்தி இதற்கென்ன காரணமோ
என்று நினைத்து இறைவனிடம் கேட்பமென்று
சென்றேன் திருலோகம் தெய்வத்தைக் கண்டுவிட்டேன்.
ஆழ்ந்த அமைதியுடன் ஆண்டவனார் வீற்றிருந்தார்.
ஆண்டவனே! என் மனதில் ஐயமென்று உள்ளதென்று.
காண்டீபம் போல்வளைந்து கையெடுத்துக் கும்பிட்டேன்.
விண்ணில் இருந்து எங்கள் வேதனையைப் பார்ப்பதற்கோ
மண்ணில் எமைப்படைத்தாய் மனிதர் படும் துயரம்
என்னவென்று சொல்லி எடுத்துரைப்பேன் உங்களிடம்
சொன்னால் கண்ணீர் சொரியும் தூயவரே உங்களுக்கும்
அன்னையில்லாப் பிள்ளைகள் போல் அழுது தவிக்கின்றோம்
பஞ்சம் பசிகளவு பட்டினியும் பொய் கொலையும்
மிஞ்சும் பல நோய்கள் வேதனைகள் சோதனைகள்
சூறாவளி வெள்ளம் சுனாமியொடு மண்சரிவு
ஆறாத வெப்பம் அனர்த்தம் நிலநடுக்கம்
உயிரிழப்போ பல லெட்சம் உடமைகளோ பல கோடி
மயிரிழையில் நான் தப்பி வந்து இங்கே நிற்கின்றேன்
எம்மை இந்தத் துன்பங்கள் ஏன் வருத்துகின்றதென்று
இந்த மடையனிடம் இயம்புமென்று கேட்டு நின்றேன்.
என் நிலையைக் கண்ட இறைவன் மனமிரங்கி
புன்முறுவல் பூத்து புனிதவாய் தான்திறந்து
மானிடனே! நானுமுன்னை மறு உயிர்க்கும் மேலாக
ஆறாம் அறிவு தந்து அவனியிலே நான் படைத்தேன்
நியதி பல வைத்தேன் நீயுணர்ந்து முன்னேற
அமைதியைக் காத்திடுதல் அடியேனின் வேலையல்ல
என்றும் அமைதியுடன் இவ்வுலகில் நீவாழ
உன்னைப் படைத்துள்ளே உள்ளமொன்றை நான் வைத்தேன்
வைத்த அந்த உள்ளத்தின் மகிமை தன்னைப் போதிக்க
புத்தரொடு யேசு நபி போன்ற எந்தன் தூதர்களை
சித்தர்களை முத்தர்களை இருடிகளை முனிவர்களை
எத்தனையோ ஞானிகளை அங்கே அனுப்பி வைத்தேன்
அங்கே அனுப்பிவைத்த அவர் வழியே நாடாமல்

எங்கோ அலைகின்றீர் அதுஎந்தன் குற்றமல்ல
அஹிம்சை தனையறிய அனுப்பினேன் காந்தி தன்னை
வன்பறிந்து நீவிலக வல்லரக்கர் நான் படைத்தேன்
கள்ளமல்லா உள்ளத்தை கைக்குழந்தை காட்டவைத்தேன்
எள்ளுக்குள் எண்ணெய் வைத்தேன் என்னை உணர்ந்துகொள்ள
நானிலங்கள் காற்று மழை நல்லாறு கடல் மலைகள்
சோலை வனங்களுடன் தூயநீர்ப் பொய்கை வைத்தேன்.
இவைகளை நீ நஞ்சாக்கி இயல்பு நிலை மாற வைத்தாய்
எவையெல்லாம் தீமைகளோ அதன் வழியே நீ நடந்தாய்
சூரியனைச் சந்திரனைச் சுழலவிட்டேன் உனக்காக
உண்மையே வெல்லுமென்று உலகறியக் காட்டுதற்கு
மன்னன் அரிச்சந்திரனை வாய்மைக்கு நான் படைத்தேன்
கூடியே உண்பதற்கு குவலயத்தில் காகமுடன்
சோடி உறவுக்கு தூயஅன்றில் நான் படைத்தேன்
நல்லதையே பிரித்தெடுக்க நான் அன்னம் படைத்திருந்தும்
கெட்டதையே தேர்ந்தெடுத்துகெடுவதும் நீதானே
பேதை மனந்தெளிய பெரியதர்ம சாத்திரங்கள்
கீதை குறளுனக்கு கிடைக்கவைத்தேன் மானிடனே
வருகுமே மேடு பள்ளம் வாழ்க்கையிலே என்றறிய
இரவு பகல் மாறவைத்தேன் இதை நீ உணர்ந்தாயா?
பிறந்த பொழுதிலும் சா பின்னூறு ஆண்டிலும் சா
இறப்பும் பிறப்பும் என் பொறுப்பு ஆதலினால்
பிஞ்சும் உதிரும் பெருங் கனியும் தானுதிரும்
அஞ்சாமல் நீவாழ ஆனஇடைக் காலமுண்டு
இந்த இடைக் காலத்தில் இவை உணர்ந்து வாழாமல்
எனை மறந்து என்படைப்பின் தத்துவங்கள்
தன்னை மறந்து தலைகீழாய் நீநடந்து
நொந்து அழுது வந்தால் இதற்கு நான் என்ன செய்வேன்
அடிப்பதுவும் நீங்கள்தான் அழுவதுவும் நீங்கள்தான்
தடுக்கி வழிநடந்து தவிப்பதனால் என்ன பயன்
உண்மையை நீ உணர்ந்து ஒழுங்காய் நடந்து வந்தால்
என்னை நீ தேடி இங்கு வரத் தேவையில்லை
ஆதலினால் மானிடனே! அயர்ந்து நீபோகாதே
உன்னுடைய உள்ளத்தின் உள்ளே நீ சிந்தித்தால்
என் படைப்பின் நோக்கமெல்லாம் எளிதில் புரிந்து விடும்
சென்று வா என் மகனே! திருந்தி நீவாழ்ந்திடுக!
என்று சொல்லி என் தெய்வம் எனக்கு விடை தந்ததுவே.

# சிவபெருமானும் செம்மனச் செல்வியும்

சிவ: சண்முகவடிவேல் அவர்கள்

சென்ற இதழ்த் தொடர்ச்சி...

(இ)

செம்மனச் செல்வி அம்மையார் ஆலவாய்க்கோயில் வாயில் முகப்பில் நின்று தங்குறை எடுத்துத் தாங்களும் துயரொடு சாற்றுவார். ஆலயத்தினுள்ளே நீண்ட இலை போலும் சூல வேலைத் தாங்கிய நிர்மலர் - சோமசுந்தரக் கடவுள் வீற்றிருந்தருளினர்.

வந்தி அம்மையாருடைய கண்களில் இருந்தும் கண்ணீர்த் துளிகள் முத்து முத்தாக உதிர்ந்தன அது மூதாட்டியினுடைய மிகத் தளர்ந்த தனங்களைக் கொண்ட மார்பை நனைத்தது, பிட்டு வாணிச்சியார் கடவுளைடைய திருவடித் தாமரைகளை தரிசித்தார் தாழ்ந்து வணங்கினார். எழுந்து நின்றார். தாம்வேண்டுங் குறையை உள்ளம் உருகி உணர்த்துகின்றார்.

"அடியாளை அடிமையாக வுடைய ஆலவாய் அமுதே" தேவரீரிடத்தி லன்றித் தமியேன் வேறுயாரிடத்தில் எனது துயரத்திற்கு பரிகாரம் தேடிக் கொள்வேன்?

"அடியாளுக்கு இரங்க வேண்டும், குறை தீர அநுக்கிரகம் காட்டவேண்டும்" வைகை நதியின் நீர் உடையா வண்ணம் அடைக்க வேண்டும். ஒரு கூலியாளை மருந்துக்கும் காணேன், கருணைக் கடல் என்றும் எல்லோரும் காதலித்துத் தொழுகின்றார்கள்.

"அடியார்க்கு எளியான் சிற்றம்பலவன் என்று பலரும் பேசுமொழி என்னளவில் பிழைபடலாமோ? எந்தையே! ஈசா! எனக்குத் தாய் இல்லை, தந்தை இல்லை இன சன சுற்றம் இல்லை கொடிது கொடிது எனது வறுமை கொடிது.

"துணை இல்லை சுற்றமாகும் பனை இல்லை. என்று கொள்ள ஒருவர் இல்லை, பற்றுக் கோடாம் புனை இல்லை, துன்பக் கடலுள் புலம்புறும் பாவியேனுக்கு இணை இல்லை, துன்பம் நனி நலிந்து தொடர்வது எந்தாய் அறந்தானோ?

"எனது மனத்துயர் விட்டு நீங்கப் பரம கருணாநிதியாகிய தேவரீர் சற்றுக் கடைக்கண் பார்க்காதிருந்தால் யான் யாது செய்வேன்?

"அமரர்க்கும் அரியனாகும் அமரா! அன்பரானவர்க்கு எளியவராகும் ஈசனேயோ!! மன்னுடைய ஆணை காக்கும் மந்திரிமார்களுடைய சினம் என்மீது சீறா முன்னம் கூலியாளன் ஒருவரையும் கண்டிலேன். ஏழை பங்களா! ஏழையேன் இனி யாது செய்வேன்? யாது செய்வேன்....

"வானவர்கள் வாதை தீர வளர் நஞ்சுண்டீர்கள் முப்புரங்களை முனிந்தீர்கள்.....சலந்தராசுரனைச் சூலத்தில் ஏந்தினீர்கள்... மார்க்கண்டர்காக மறலியை

மாய்த்தீர்கள். பாய்ந்துவருங் கங்கையைப் படர் சடையில் தாங்கனீர்கள்! கயாசுரனைக் காய்ந்தீர்கள்....இந்த ஏழைக்காக என்ன செய்ய வந்தீர்கள்? அழுதாள் - புலம்பினாள் அன்னை ஆற்றாது அரற்றுவாள்.

(ச)

ஞானமூர்த்தியாகிய சோமசுந்தரக் கடவுள் ஞாதியற்ற நரை மூதாட்டிக்குக் கூலியாளராகத் துணிந்தனர்.

தேவ தேவர் கண்ணீர்க் கடலில் கரைகாணாது கதறும் செம்மனச் செல்வியார் கண்காணக் கூலியாளராகக் காட்சிதந்தார்.

அழுக்கும் அருவருக்கும் கந்தை ஒன்றை ஆடைஎன்று பெயர் பெற அரையில் வரிந்து கட்டிக் கொண்டார். விழுமிய தொண்டர் பூக்களால் புனைந்து சாத்திய இண்டைமாலைக்கு ஒப்பான சும்மாடு ஒன்றை திருமுடிமேல் சேர்த்துக் கொண்டார். அதன்மீது கவிழ்க்கப் பெற்ற மண் சுமக்கும் கூடை ஒன்று, திருத்தோளில் கூர் மழுங்கிய மண் வெட்டி ஒன்று விளங்கியது.

முனிவர்கள் அன்பினால் வேள்வியில் வழங்கும் அவிப்பாகத்தையும் இடப்பாகத்தில் எஞ்ஞான்றும் உறையும் அங்கையற் கண்ணம்மையார் அருந்தும் அமுதத்தையும் இனிது அருந்தியும் தண்டாத வேட்கை பசியுடையார் போன்று பசிப்பிணியால் தாய்முகம் நாடும் சேய்முகத்தவர் போல திருவாலவாய்த் திருவீதியில் பாதத் தாமரைகள் வருந்த நடந்து வந்தருளினார்.

அசல் கூலியாளர் என்றால் கூலியாளர்தான். வேடப் பொலிவிலும் நடிப்பிலும் உண்மையான கூலியாளனும் பிச்சை வாங்கவேண்டும் போன்ற ஒப்பனைச் சிறப்பு.

ஒலிக்கும் வேத முடியின் உச்சியிலுள்ள திருவடிச் சிலம்பும் கலீர் கலீர் என்று நாத ஒலி எழுப்பும் பாதார விந்தங்களை நிலமகள் சூடிக்கொண்டனள்.

அழுகின்ற கண்ணீர்க் கடலில் கிடந்து அழுந்தும் அன்னை அமர்ந்திருந்த அழகிய வீதியின் வழியாக ஆடிஆடி அசைந்து பாடிப் பாடி வந்தார் அன்புடைத் தொண்டர் விருப்புறு வேடம் விரைவில் கொள்ள வல்ல ஆலவாயின் கண் அமர்ந்தருளும் சோமசுந்தரக் கடவுள்.

"கூலியாள் வேண்டுமோ...கூலியாள் வேண்டுமோ" என்று சத்தம் மிக்க வேதவொலி போல மணிவாய் விள்ள வந்தார் வித்தின்றி விளைவு செய்யவல்ல விமலனார்.

அன்னை அவ்வொலி கேட்டாள், தேனாய், இன்னமுதாய், தெவிட்டாத தெள்ளமுதாய் தித்திக்கும் தீங்கனிச் சாறாக அன்னையின் கிளர் செவியூடு புகுந்தது. காற்றினில் வரும் கீதம் கேட்டு பட்ட மரங்களும் தளிர்ப்பதுபோல அன்னையின் வாட்டம் ஓட்டம் எடுத்தது. பாலைவனம் சோலைவனம் போலாயிற்று அவள் மனமாற்றம்.

சீர்காழியில் இந்திரன் ஆக்கிய கா காவிரியின் வரவு கண்டு கண்களால் களிப்பெய்தியது போல களிபேருவகையாளனாள் பெரு மூதாட்டி.

"மகனே! எனக்கு கூலியாளனாக வருவையோ? என்று வினாவினாள் வந்தி.

"வந்தால் போச்சு... உனக்கு செய்யவேண்டிய கூலி வேலை என்ன? என்று திருப்பிக் கேட்டார் கூலியாளர்.

"என் பாங்கில் அளந்து விடப்பட்ட வைகை ஆற்றங்கரையை உயர்த்தி அணை கட்டவேண்டும்"

"ப்பூ! இது தானா பெரிய வேலை...இதோ, பார் - கூடை, மண்கொட்டு, எல்லாம் என்வசம் உண்டு. என் வேலைக்கு கூலியாக என்ன கொடுப்பாய் அதை முன்னரே வரையறப் பேசிக் கொள்ள வேண்டும். வேலைக்குப் பின்னர் நமக் கிடையே கூலித்தகராறு ஏற்படக் கூடாது" என்றார். கூலியாளரான வெள்ளியம்பலத்து மன்றாடியார்.

"தம்பி! உனக்கு நல்ல இனிய பிட்டுக் கூலியாகத் தருவேன்.

"தாயே...! நீ மதுரையிலே நான் வாழ்ந்து கொண்டிருக்கிறாயா? இன்றைய நாளில் கோடி பொன் குவித்தாலும் ஒரு கூலியைப் பிடித்து வருவாயா? கூலி இருக்கிறதா? என்று கும்பிடு போடுகின்றது வீதியெல்லாம், நீ பிட்டுக்காக மண் சுமந்து கரை கட்டக் கேட்கிறாயே......

"தம்பீ! கோவித்துக் கொள்ளாதே...? நீ இப்போது போய் வேலையைச் செய்.... உனக்கு கூலி காசாக வேண்டுமானால் அந்திப் பொழுது வா. நான் இந்தப் பிட்டினை விற்ற நீ கேட்கும் கூலியை காசாக எண்ணித் தருவது தப்பாது...இதை நீ நம்புவாய் என்றார்.

"அன்னே! நான் பெரிய பசியுடையவராக இருக்கிறேன். மாலைக் காலம் வரையில் என் வயிற்றுப்பசி கேட்காது. நான் உன்னுடைய பங்கை அடைத்துத் தருவதற்குச் சம்மதிக்கிறேன். நீ இப்பொழுதே சுவைமிக்க இனிய பிட்டினை அளிப்பாய். நான் அதனை மென்று தின்று சிறிது நேரம் இளைப்பாறிக் கொண்டு உன் பங்கை அடைப்பேன்" என்றார். என்றும் இனிய பிரானாகிய முழுமுதற் பரம்பொருள்.

"இந்தா மகனே! என்று விழித்த செல்வியார் மாவினைத் தெள்ளிச் செய்த பிட்டினைக் கையால் அள்ளி அருந்து அப்பா என்று விரும்பிக் கொடுத்தாள்.

கூலியாளர் உடுக்கையின் முந்தானையை விரித்து மூதாட்டியார் இட்ட பிட்டினை ஏற்றுக்கொண்டார்.

"தாயே! உன் கைராசியை என்னென்பேன். பிட்டு நன்றாக இருக்கின்றது என்று சொல்லிச் சொல்லிக் கூலியாளர் பிட்டினை சுவைத்துச் சுவைத்து உண்ணத் தொடங்கினார்.

"அன்னையே! உண்மையைச் சொல்லப் போனால் இந்தப்பிட்டு திருவாலவாய் மன்னர் பெருமானுக்கே உரியதாகும்" என்று கூறி முடியை ஒருதரம் அசைத்து இன்சுவை பயக்கும் பிட்டினை உண்ணப் புகுந்தார்.

"தாயே! நீங்காத என் இழைப்பை நீக்கினாய். நான் இனிமேல் வைகை ஆற்றங் கரைக்குச் செல்லுவேன். உன் மனம் மகிழும்படி வேலையைத் தொடங்குவேன். என்று கூறிக் கூலியாளர் வைகை ஆற்றங்கரையில் வந்து சேர்ந்தார்.

சிறுவர் விருந்து:-

# தானமே தவமாகும்

அன்பான பிள்ளைகளே! அன்பான வாழ்த்து!

தானத்தில் சிறந்தது அன்னதானம் என்பார்கள். அன்னதானம் மிகவும் சிறந்தது தான் என்பதை விளக்கும் கதை ஒன்றைக் கேளுங்கள். இது உண்மைக் கதை. கடந்த 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நடந்தது. புதுச்சேரி என்றொரு மாவட்டம் தமிழ் நாட்டிலே உள்ளது. அந்தப் புதுச்சேரிக்குப் பக்கத்திலே இராமநாதபுரம் என்றொரு ஊரிலே சிவராமகிருஷ்ணன் என்ற வள்ளல் ஒருவர் வாழந்து வந்தார். அன்னதானம் செய்வதில் அவருக்கு மிகவும் விருப்பம். ஒவ்வொரு நாளும் பகல் உணவாக ஒரு பெரிய பாத்திரத்தில் சாம்பார் கலந்த சாதமும்(குழையல்) இன்னொரு பெரிய பாத்திரத்தில் தயிர்ச்சாதமும் தமது வீட்டின் தலை வாசலில் வைப்பிப்பார், திண்ணையில் அவர் உட்கார்ந்து கொள்வார். வழியில் போகின்ற எல்லோரையும் கூப்பிட்டு சாப்பிடப் பண்ணுவார். இராமநாதபுரத்தில் அதைச்சூழவுள்ள கிராமங்களிலும் உள்ள ஏழைகள் ஒவ்வொரு நாளும் சிவராமகிருஷ்ணனுடைய வீட்டு வாசலிலே கூட்டம் கூட்டமாய் போய் நிறைய உணவு பெற்றுச் சாப்பிடுவார்கள். சிவராமகிருஷ்ணனும் மிகுந்த மகிழ்ச்சியோடு இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருப்பார்.

ஒரு நாள் சிவராமகிருஷ்ணனுக்கு முன்னால் ஒரு வயோதிப சாது உட்கார்ந்து இருந்தார். எல்லோரும் சாப்பிட்டுச் சென்ற பிறகும் அந்த சாது அங்கேயே உட்கார்ந்து இருந்தார். இதைக் கண்ட பணியாளர்கள் அவரைச் சாப்பிட அழைத்தார்கள். அவரோ தலையசைத்து மறுத்துவிட்டு சிரித்துக் கொண்டிருந்தார். இதைக்கண்ட சிவராமகிருஷ்ணன் “பெரியவரே ! நானும் நீண்ட நேரமாய்ப் பார்க்கிறேன் உங்களுக்கு பசிக்கவில்லையா? அல்லது வேறு ஏதாவது வேண்டுமா? எதற்காக இங்கே வந்து சும்மாய் இருக்கிறீர்கள்?” என்று கேட்டார். அந்தப் பெரியவர் சிரித்தார் “சிவராமகிருஷ்ணா! எனக்கு ஒன்றும் வேண்டாமப்பா. உனக்குத்தான் ஆசை ஒன்று உண்டு. அது நிறைவேறவில்லையே என்று ஏக்கமும் உண்டு. அப்படியல்லவா?” என்று கேட்டார். சிவராமகிருஷ்ணன் திகைத்துப் போனார். “ஐயா! எனக்கு என்ன ஏக்கம் என்று சொல்லுகிறீர்கள்?” என்றார். “நீயே சொல்! இங்கு பலர் வந்து சாப்பிடும் போது நீ உனக்குள்ளே தினம்தேறும் நினைத்து பெருமூச்சு விடும் காரணம் என்ன?” என்று பெரியவர் கேட்டார்.

சிவராமகிருஷ்ணனும் “பெரியவரே! எத்தனையோ வருடமாக நான் இந்த அன்ன தானத்தைச் செய்கிறேன். நான் செய்யும் இந்தத் தானம் இறைவனால் ஆசீர் வதிக்கப் பட்டது. என்றால் இங்கே தேவர்களோ சித்த புருஷர்களோ, வந்து இந்த அன்னத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படியாராவது வருவார்களா? என்றுதான் கவனித்தேன். யாரும் இல்லை எனது அன்னதானம்

சிறந்தது அல்ல என்று நினைத்து பெருமூச்சு விடுவேன் இது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று பயபக்தியோடு கூறினார். "உன் அன்னதானம் சிறந்ததுதான். இங்கே நீ நினைக்கின்றபடி சித்தர்களும், தேவர்களும் வருவதுண்டு. உன் கண்ணுக்குத் தெரிவதில்லை ஆகவே வருத்தப்படாதே" என்றார் அந்தப் பெரியவர். "உங்கள் பேச்சை நான் எப்படி நம்புவேன்? என் கண்களால் கண்டால் ஒழிய எதையும் நான் நம்ப மாட்டேன்" என்பார் சிவராமகிருஷ்ணர். "உன் ஊனக் கண்ணால் அவற்றை நீ பார்க்க முடியாதே பார்த்தால் கண் குருடாகி விடுமே" என்றார் பெரியவர்.

"கண் குருடானாலும் பரவாயில்லை. நீங்கள் சொல்வது உண்மை என்றால் அதை நீங்கள் நிருபிக்க வேண்டும்." என்று சவால் விட்டார் சிவராமகிருஷ்ணர். தான் மறுநாள் வருவதாகக் கூறிவிட்டுப் பெரியவர் போய்விட்டார். அடுத்தநாள் பகல் கூட்டமாப் பலர் சாப்பிட வந்து கொண்டிருந்தார்கள் வரிசையாக நின்று இலையிலே சாதத்தைப் பெற்றுக் கொண்டு போகிறார்கள். இடையே பெரியவரி ஒரு இடத்தைச் சுட்டிக் காட்டினார். மேனி முழுவதும் ஒளி வீசும் விசித்திரமான தேவ உருவங்கள் இரண்டை சிவராமகிருஷ்ணன் கண்டார். கை கூப்பித் தொழுது கண்ணீருடன் வணங்கினார். அடுத்த கணம் அவருடைய கண்கள் வேறு ஒன்றையும் காணமுடியாது குருடாகிப் போயின தான் கண்ட காட்சி அந்த அதிர்ச்சியிலும் மகிழ்ச்சியிலும் முழுகிய சிவராமகிருஷ்ணன் இரண்டு வருடங்களுக்குப் பிறகு ஒருநாள் திடீரென்று வந்த அந்தப் பழைய பெரியவர் "சிவராமகிருஷ்ணா! என்னைத் தெரிகிறதா?" என்று வாசலில் நின்று கூறியதைக் கேட்டு கண் திறந்து அவரைப் பார்த்தார். ஆம் அவருக்கு மீண்டும் கண் பார்வை வந்து விட்டது. மன நிறைவோடு பல காலம் அன்னதானம் செய்து வாழ்ந்தார் சிவராமகிருஷ்ணர்.

*** *** ***


# சிவபூமி கண்தானச் சபை

**தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன்வாருங்கள்**
**உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்று இருக்கும் ஒருவருக்கு**
**ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே**
**இப்புண்ணிய காரியத்துக்கு**
**ஒப்புதல் தாருங்கள்.**

**தொடர்புகளுக்கு:**
**ஆறு. திருமுருகன்**
தொலைபேசி
**021-222 6550**

**கண் வைத்திய நிபுணர்கள்:**
**Dr. ச. குகதாசன், 021-222 3645**
**Dr . சிவந்தா, 021-222 3149**
யாழ், போதனா வைத்தியசாலை

# ஆனிமகமும் திருவாசக நினைப்பும்

கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி J.P

ஆண்டு தோறும் ஆனிமாதம் பிறந்துவிட்டால் மகநட்சத்திரத்தை சைவ உலகம் மறக்க முடியாது. மணிவாசகப் பெருமானுடைய குருபூசைத்தினம் இதுவாகும். தேனின் இனிய திருவாசகப் பாடல்களால் சைவ உலகை எழுச்சி பெறச்செய்தவர் இவர்.தான் பெற்ற எழுச்சியை பரவ வைத்தவர் மாணிக்கவாசகப் பெருமான்.

**"இரும்புதரு மனத்தேனை**
**ஈர்த்து ஈர்த்து என் என்புருக்கி**
**கரும்புதரு சுவை எனக்கு காட்டினாய்"**

என்று குருமணியால் ஆட்கொள்ளப்பட்ட சிறப்பை திருவாசகத்தில் காட்டியுள்ளார்.

**"பழுதி லாதசொல் மணியினைப் பக்திசெய்து அன்பு**
**முழுது மாகிய வடத்தினால் மறை தொடுத்து அலங்கல்**
**அழுது சாத்தும் மெய் அன்பருக்கு அகமகிழ்ந்து ஐயர்**
**வழுவி லாதபேர் மாணிக்க வாசக னென்றார்"**

இறைவனால் தனக்கு அருளப்பட்ட அற்புதத்தை மேற்படி பாடலில் காட்டுகிறார். தமிழ் மொழியில் எழுந்த பக்தி இலக்கியங்களுக்குள் திருவாசகத்துக்குச் சிறப்பிடம் உண்டு. ஓதுவாரது என்பு நைந்துருகும் உள்ளம் நெக்கு நெக்கேங்கவும் ஆக்குந்திறன் திருவாசகப் பாடல்களுக்கு உண்டு. இதனை அழுது அழுது ஆண்டவன் அடிகளில் சாத்தினார். மணிவாசகர் "நினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே" என்று போற்றினார். அவரடைந்த பக்திப் பரவச நிலையைத் திருவாசகத்தை உள்ளன்போடு ஓதுவார் அனைவரும் உணரமுடியும்.

மணிமொழிகளை வழங்கிய அடிகளுக்கு மாணிக்கவாசகர் என்ற நாமத்தை இறைவனே சூட்டியருளினார். இது இறைவனாற் கொடுக்கப்பட்ட தீட்சா நாமம். இறைவரே இவர் பாடல்களை விரும்பித் தமது திருக்கரத்தால் எழுதித் **'திருச்சிற்றம்பலமுடையார்'** என்று கைச்சாத்துமிட்டனரென்றால் இதன் பெருமைக்கு வேறுசான்றுகள் தேவையில்லை. இவ்வாறு பெரும் புலவராகிய மணிவாசகரின் பாடல்களை எம்பெருமான் எழுதியமை குறித்துச் சிவப்பிரகாச சுவாமிகள் கற்பனைசெய்து மணிவாசகரை நோக்கிக் கூறுவது போறபாடுகிறார்.

**"தன்னை நீ புகழ்ந்து உரைத்த**
**பழுதில் செய்யுள் எழுதினன் அதனால்**
**புகழ்ச்சி விரும்பன் போலும்**
**இகழ்ச்சி அறியா என்பனி வோனே"**

திருவாசகப் பாடல்கள் மாணிக்கமணி போன்றவை என்பதோடு அமையாமல் தேன்போன்றவை என்பதையும் பெரியார்கள் அனுபவத்திற் கண்டனர். 'மணிமொழியார் நூலைவிரும்பித் தம்மோடு வைத்துக் கொண்டது கடையூழி வரும் தனிமை கழிப்பதற்காக' என்று நயப்பாகப் பாடினார் சுந்தரம்பிள்ளை. எனவே சைவத்திருமுறைகளில் சிறப்பிடம் பெற்ற திருவாசகத் தேனை அனுபவித்து உய்தி பெறுவோமாக.

## அம்பிகையே சரண் புகுந்தோம்

துர்க்கா தேவித் தாயே
சரணம் அம்மா தேவி
எங்கள் இதயத்தில் உறைந்திடவே
தினந்தோறும் வணங்கிடுவோம் தாயே.

அன்னையின்அரவணைப்பைப்பெற்றிடவே
ஆலயம் நோக்கி வந்திடுவோம்
ஆறுதல் தந்தெம்மைக் காத்திடவே
அம்பிகையே சரண் புகுந்தோம்.

கிருஸ்ணசாமி . கஸ்தனி
மானிப்பாய் மகளிர் கல்லூரி

## துர்க்கா தேவி அன்னையே போற்றி

அன்னையாய் காட்சி தரும்
ஆதிபராசக்தி தாயே போற்றி
இகபர சௌபாக்கியம் தந்து
ஈன்றவள்போல் காப்பாய் போற்றி

தெல்லிப்பழையில் வீற்று அருளும்
துர்க்காதேவி அன்னையே போற்றி
திருவீதி வலம்வந்து தினமும்
காப்பாய் போற்றி போற்றி.

கிருஸ்ணசாமி – ஜமுனாதேவி
மானிப்பாய்.

## பஞ்ச கிருத்திய திருநடனம்

நடராசர் ஆடுகின்ற ஆனந்தக் கூத்து
நல்லதொரு விளக்கமாகும் ஐந்தொழிலைச் சாற்ற
படைத்தலது தனுகரண புவனபோ கங்கள்
படைத்தலொடு காத்தித்து மறைத்து அருளல்
கிடைத்ததொரு த்துவத்தைக் காட்டுகிற பஞ்ச
கிருத்தியத்துத் திருநடனம் என்பதுவும் இதுவே
அடைந்திடுவார் ஆன்மாக்கள் வீடுபேறு தனையே
அற்புதமாம் கண்டவிந்தச் சைவத்தின் முடிபே.

கவிஞர். வ. யோகானந்தசிவம்

## பதியின் இலக்கணம்

பாசம் பசு இரண்டிற்கும் தலைவன் பதியாம்
பதியின் நிலைகளில் ஒன்றாம் சொரூபம்
பேசுதற்குக் குணம்குறிகள் இல்லா நிலையாம்
பெரும் சிறப் பானதொன் றாகும் நிலையாம்
ஈசனவன் உயிர்களுக்கு அருளல் செய்ய
எடுத்த தொருநிலை தடத்தல் ஆகும்
பேசுகின்ற ஐந்தொழில்கள் சக்தியோடு
பேணியை வன்செய் கின்றான் தானே.

கவிஞர். வ. யோகானந்தசிவம்

# மனசு உள்ளவன் மனிதன் மனோசக்தி இல்லாதவர்கள்!

பேரறிஞர்
முருகவே பரமநாதன்

"அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"
– குறள் 430

"உறுப்பொத்தல் மக்களொப் பன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு"
(வெறுத்தக்க - செறியத்தக்க) – குறள் 993

"மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும்"
(ஆக்கம் - செல்வம்) – குறள் 475

மனிதன் என்பதற்குப் பல விமர்சனங்கள் சொல்லப்படுகிறது. அவற்றில் ஒன்று மனம் உடையவன் மனிதன் என்ற வரைவிலக்கணம். விஞ்ஞா, சமூக இயல் நோக்கில் மனிதன் அரசியல் பிராணி, சமுதாயப்பிராணி, சமுதாய விலங்கு என வர்ணிக்கப்படுகிறான். பகுத்தறிவு உடையவன் மனிதன் பகுத்தறிவு வாதி மனிதன். ஆறாம் அறிவுடையவன் மனிதன். அதுவே பகுத்தறிவு. ஆய்ந்து ஆராய்ந்து ஓர்ந்து பார்த்து, நல்லதெது கெட்டதெது எனக்கண்டு நல்வழியிற் தன்னை வழிப்படுத்துபவன் மனிதன். மனச்சாட்சி உள்ளவனே மனிதன். துட்டத்தனம் இல்லாத மனிசத்தனம் ஒளிர்பவனே மனிதன். அவனிடத்திலே மனச்சான்று (மனச்சாட்சி) பளீச்சிடும். அகவியல் புரிந்த தொல்காப்பியர் ஆறறிவுடையவன் மனிதன். ஐயறிவுதான் விலங்குச் சுபாவம் என்றார். மாவும் மாக்களும் ஐயறிவினவேயென்றார். மா மிருகம் (விலங்கு) மாக்கள் ஓரறிவு குன்றிய மனிதர். இன்று மனிதம் மானுடம் என்ற வழக்காறு மனிதத் தன்மை பொங்கிவழியும் மனித இனத்தைப் பற்றிப் பேசுகிறது. மனிதன் மனிதனாக வாழவேண்டும். தேவனாக வேண்டியதில்லை. மனிதவிழுமியம் விழுப்பம் பூத்துக்குலுங்கும் சமுகம் மதிப்புடையது. அதிலிருந்து விலகியவர்கள் விலங்கினம். மனம், உள்ளம், நெஞ்சம், அகம், ஒரு பொருளமைவுடையன. இன்றைய சூழ்நிலையில் மனிதனும் அவன் மனமும் வெகு தூரம் மாற்றம் அடைந்தமை யதார்த்தம். மனித ஆளுமைகள் வெளிப்படும் இடமே மனிதம். மானுட இலக்கணம் முக்கியம் அறிவுசீவிகள், புத்திசீவிகள் வழிதவறக் கூடாது. நெறிபிறழக்கூடாது. மூளையின் தொழிற்பாடே மனம் என்பர் மன இயல் நிபுணர். மனம்வேறு மூளைவேறு என்ற கொள்கையும் அறிவுலகில் நிலவுகின்றது. விழிப்பு, செப்பனம், உறக்கம் என மனத்தொழிற்பாடு வகுக்கப்பட்டுள்ளது. அகமனம், புறமனம், மறைமனம் என்பது பற்றி ஆய்வுகள் தொடர்கின்றன. மனம், புத்தி, சித்தம், அகங்காரம், அந்தக்கரணங்கள். இதில் புத்தியைத் தவிர்த்து மூன்றாகவும் கூறுவர். மனம் என்றோர் அமைப்பு இல்லை என்பவரும் உளர். பாபா இருதயத்தின் ஓர் உள்ளமைப்பே மனம் என்பர். மனம் வெளுக்க வழியில்லை என்கிறார் பாரதி. மனம்போலவே வாழ்வு. மனம் போன போக்கெல்லாம் என்கிறது உலகநீதி, மனநலம் முக்கியம். மாசற்ற மனம் பற்றி வள்ளுவர் பேசியுள்ளார் சுத்த மனத்திலே இறைவன் குடி கொள்வான். மனத்தகத்தான் தலை மேலான் என்பது அப்பர் மொழி மனமெனுந் தோணி பற்றிப் பேசியவர் சுந்தரர், இறைவன் இருப்பிடமே மனம் என்ற கோட்பாடுடையது

நம் சமயம். மனம் இருந்தால் போதாது மனஸ்சும் வேண்டும் இதுவே மனப் பக்குவம். சிறந்த பழக்கவழக்கம். மனதற்ற நிலையில் இறைவனோடு கலக்கும் பேறு. இதையே தாயுமானவர் மனதற்ற நிலையருள்வாய் எனப் பாடியுள்ளார். மனமிருந்தும் மனமே இல்லாதவர்கள்போல் நடப்பர் மனமிருந்தாற்ப் போதாது மனசும் தேவை. சிலரை நாம் பார்த்து அவன் மனேஸ் இல்லாதவன் என்கிறோம். மனித சமூகத்தின் இன்றைய மனப் பான்மை றொம்பவும் மனுசப் பக்குவத்தை இழந்தே வழிநடக்கிறது. வெளிநாடுகளில் சைவசமய ஆலயங்கள் மனிதத்தைத் தொலைத்து விட்டமை வெள்ளிடைமலை. இவை வணக்கத் தலங்களா - வணிகத் தலங்களா எனப் பொது மக்கள் விசாரணை செய்கிறார்கள். எச்சமயத்திலும் கோயில் வழிபாடு முக்கியமானதொன்று சைவசமயம், இறையருள் கூடிய இடம் திருக்கோயில் என்பதில் தெளிவாயுள்ளது எனவே கோயில்கள் நன்கு பரிபாலிக்கப் பட வேண்டும் அர்ச்சகமாரும் அந்தரங்க சுத்தியோடு ஆலயத்தில் பணிமேற்கொள்ள வேண்டும். நாமும் இறைவனைத் தேடும் மார்க்கத்திலும் இறைவன் நம்மைத்தேடி அருள்பாலிக்கும் படி நாம் நடக்கவேண்டும். எண்ணங்கள் நல்லதாய் அமைய வேண்டும். நல்லதையே எண்ணவேண்டும். உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும். மனச்சுத்தம் எல்லாச் சுத்தத்திலும் மேலானது இது வாய்மையால் காணப்படும் என்கிறார் வள்ளுவர். அன்பு, நேர்மை, நாணயம், நீதி போன்ற அருங் குணங்களை நாம் வளர்க்கவேண்டும். தினமும் அமைதி, நிம்மதி, மகிழ்ச்சி போன்ற பல வாழ்வியல் மேம்பாட்டிற்கும் மனமே காரணம். போராட்டம், குழப்பம், விரக்தி, அழுத்தம், மனநிதானமின்மை போன்ற பல மனத்தாக்கங்கட்கும் மனமே அடிப்படை. இஃது வளர்ந்து மனநோயாகவும், இன்சோமினியாவாகவும் வளர வாய்ப்புண்டு. பொது நோக்கில் வாழ்வுக்கும் தாழ்வுக்கும் மனமே காரணி எதற்கும் மனத்திடம் உறுதி வேண்டும். இந்த மனவலிமை ஒன்றே மனித சமுதாய வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் உறுதுணையாகும். மனதை குறிப்பிட்ட ஒன்றிற்காக விட்டு வாழ்வைப் போட்டடித்தவர்களும் இருக்கிறார்கள். இந்த மனத்தின் இயக்கம் மனிதத்தைத் திப்பிலி ஆட்டி பெரியதொரு அக மனத்தாக்கத்தை விளைவிப்பதும் அனுபவம் காட்டும் நிகழ்வுகள் மஹாகவி பாரதியாரின் சிந்தனையைத் தூண்டிவிட அது கவிதையாகவே வடிவெடுத்துள்ளது.

**"மனமெனும் பெண்ணே! வாழி நீ கேளாய்!**
**ஒன்றையே பற்றி யூச லாடுவாய்**
**அடுத்ததை நோக்கி யடுத்தடுத் துலவுவாய்**
**நன்றையே கொள்ளெனிற் சோர்ந்துகை நழுவாய்**
**விட்டுவி டென்றதைவிடாதுபோய் விழுவாய்.**
**தொட்டதை மீள மீளவுந் தொடுவாய்**
**புதியது காணிற் புலனழிந் திடுவாய்**
**புதியது விரும்புவாய் புதியதை அஞ்சுவாய்,**
**அடிக்கடி மதுவினை அனுகிடும் வண்டு போல்**
**பழமையாம் பொருளிற் பரிந்துபோய் வீழ்வாய்.**
**பழமையே யன்றிப் பார்மிசை யேதும்**
**புதுமை காணோமெனப் பொருமுவாய் சீச்சீ!**
**பிணத்தினை விரும்புங் காக்கையே போலே**
**அழுகுதல், சாதல், அஞ்சுதல் முதலிய**
**இழிபொருள் காணில் விரைந்ததில் இசைவாய்**
**அங்ஙனே,**

என்னிடத் தென்றும் மாறுதலில்லா
அன்பு கொண்டிருப்பாய், ஆவிகாத்திடுவாய்,
கண்ணினோர் கண்ணாய் காதின் காதாய்ப்,
புலன்புலப் படுத்தும் புலனா யென்னை
உலக வுருளையில் ஒட்டுற வகுப்பாய்,
இன்பெலாந் தருவாய் இன்பத்து மயங்குவாய்,
இன்பமே நாடி யெண்ணிலாப் பிழை செவ்வாய்
இன்பங் காத்துத் துன்பமே யழிப்பாய்
இன்பமென் றெண்ணி துன்பத்து வீழ்வாய்
தன்னை யறியாய் சகத்தெலாக் தொளைப்பாய்
தம்பின் னிற்குந் தனிப்பரம் பொருளைக்
காணவே வருந்துவாய், காணெனிற் காணாம்
சகத்தின் விதிகளைத் தனித்தனி அறிவாய்,
பொதுநிலை அறியாய், பொருளையுங் காணாய்
மனமெனும் பெண்ணே! வாழி நீ கேளாய்
நின்னொடு வாழும் நெறியுநன் கறிந்திடேன்
இத்தனை நாட்போல் இனியுநின் னின்பமே
விரும்புவேன், நின்னை மேம்படுத் திடவே
முயற்சிகள் புரிவேன் முத்தியுந் தேடுவேன்
உன் விழிப்படாமல் என்விழிப் பட்ட
சிவமெனும் பொருளைத் தினமும் போற்றி
உன்றனக் கின்பம் ஓங்கிடச் செய்வேன்"

**தெய்வப்பாடல் 22 – மனம்பெண்**

மனத்தைப் பெண்ணாக உருவகித்து அதன்சேட்டைகளை யதார்த்தபூர்வமாக வெளிக்கொணர்ந்துள்ளார் பாரதி. ஈற்றிலே "சிவமெனும் பொருளைத் தினமும் போற்றி உன்றனக்கின்பம் ஓங்கிடச் செய்வேன்" எனக் கவிதையைப் பூர்த்தியாக்கியுள்ளார். சிவசிவ என்றிட தீவினை மாளும் என்ற திருமந்திர வாய்ப்பாட்டுக்கமையப் பேசியுள்ளமை தத்துவ, சமயபூர்வமானது. இனி மனத்தின் வழியலைய மாட்டேன். என்வழியிலே தான் மனம் செல்லவேண்டும் மென்ற நிதானமான தொழிற்பாடு எம்மைச் சிந்திக்க வைக்கிறது இதனாற்த் தன் மனதுக்கே ஓர் கட்டளை பிறப்பித்துள்ளார்.

"பேயா யுழலுஞ் சிறுமனமே!
பேணா யென்சொல் இன்றுமுதல்
நீயா யொன்றும் நாடாதே
நினது தலைவன் யானேகாண்,
தாயாம் சக்தி தாளினிலும்
தரும மெனயான் குறிபதிலும்
ஓயா தேநின் றுழைத்திடுவாய்
உரைத்தேன் அடங்கி உய்தியால்"

**மேலது 21மனதிற்குக்கட்டளை**

இந்தமனம் ஆசையெனும் சுழியில் அகப்பட்டும் கற்பனைச் சூறாவளியில் மிதந்தும் சில வேட்கைகளை நிறைவேற்றிச் சுயவிருப்பங்களில் இன்பம் காணத் துடித்துக் கொண்டிருக்கிறது. சில மணித்துளிகளேனும் நாம் நினைத்தபடி செயற்பட முடியாதென்பதை உணராத நிலையே இது. இப்பண்பை ஔவைப் பிராட்டி "உண்பது நாழி உடுப்பது நான்கு முழம், எண்பது கோடி நினைந்தெண்ணுவன" என எழுதி வைத்துள்ளார். இதையே வள்ளுவனார்அவருக்கு முந்தியே முன்மொழிந்துள்ளார்.

**"ஒரு பொழுது வாழ்வ தறியார் கருதுப**
**கோடியு மல்ல பல"**

**– குறள் 337**

**இதன் பொருள்:–**

அறிவிலாதவர் ஒருவேளையாவது வாழ்க்கையின் தன்மையை ஆராய்ந்து அறிவதில்லை, ஆனால் வீணில் எண்ணுவனவோ கோடியும் அல்ல, மிகப்பல எண்ணங்களே.

மனித மனத்தின் மனப்பான்மை கிடந்தவாறென்னே! நிதானமான புத்தி சித்தியுடன் மனம் தொழிற்பட நாமே காரணகர்த்தர்கள். வேண்டாத ஆசைகளை விலக்கி, கட்டுமெட்டாக வாழின் வெற்றிபெறுவோம். மனத்தூய்மை முக்கியம். காட்டில் வேட்டையாடும் கானவனுக்கும் (வேடன்) நாட்டையாளும் மன்னனுக்கும் என்ன வித்தியாசம். மற்றவர்கட்கு என்ன பேதம். பசிக்கு உணவும், மானங்காக்கபுடைவையும் இன்றியமையாதன. இதைப்பட்டாகவும், பால்பழமாகவும் மாற்ற விரும்பும் மனமுடையோரும் வாழ்கிறார்கள். கஞ்சியைக்குடித்து- கந்தையைக் கட்டுவாரும் வாழ்கிறார்கள். பாயாசம் சாப்பிடுபவர்உயரப்பறக்கிறார். பழங்கஞ்சிக்கு வக்கில்லாதவர் கட்டாந்தரையிற் படுக்கிறார். இறுதி முடிவு ஒன்று தான். சுடலை சேர்வது சொற்பிரமாணம். எனவே மனம் நம்மை வழிநடத்த விடாமல், நாம் மனதை வழிப்படுத்த வேண்டும். இந்த மனிதப் போக்கின் உண்மையை சங்ககாலப்புலவன் பாடியுள்ளார்.

**"தென்கடல் வளாகம், பொதுமை இன்றி**
**வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கும்**
**நடநாள் யாமத்துப் பகலும் துஞ்சான்**
**கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்**
**உண்பது நாழி உடுப்பவை இரண்டே**
**பிறவு மெல்லாம் ஒரொக்கும் மே**
**செல்வத்துப் பயனே ஈதல்**
**தூய்ப்பே மெனினே தப்புந பலவே"**

புறநானூறு 189. மதுரைக்கணக்கனார் மகன் - நக்கீரர் இந்த வாழ்வியற் தர்மம் தெரிந்தோர்- புரிந்தோர் மேதகு மனிதர்கள் மனம் போனதிசையிலே நாம் போகாது- முழுமுதற் பொருளாம் சிவனையே சித்தத்தில் இருத்தி வழிவகுத்தது நம் சமயம். பாரதியும் அதையே சுட்டிக்காட்டினார். ஆக மனம் தூய்மையாக இருக்க வேண்டும்.

**"மனத் தகத் தழுக் கறுத்த மௌன ஞான யோகிகள்**
**முலைத் தடத் திருக்கினும் மனத்தகத்தழுக் கறுப்பர்**
**மனத் தகத் தழுக் கறுத்திடாத மௌன ஞான யோகிகள்**
**வனத் தகத் திருக்கினும் மனத்தகத்தழுக்கு அறுத்திடாரே"**

**சிவவாக்கியர்**

ஆக மனமும் மனேசும் உள்ளவர்களாய் வாழ்ந்து மனிதமுத்திரையை ஆழப்பதித்துத் திறமான வாழ்வை மேற் கொள்வோமாக.



# சிவன் அருட்கதைகள்

மாதாஜி அவர்கள்

## 23. விருத்த குமார பாலரான கதை

விக்கிரம பாண்டியன் காலத்தில் மதுரையில் விருபாக்கன் என்ற பிராமணன் இருந்தான். அவன் மனைவி சுபவிரதை. இருவருக்கும் நீண்ட காலம் குழந்தைப் பேறில்லாமையால் எண்ணில்லாத தான தருமங்கள் செய்தமையால் ஒரு பெண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு கௌரியெனப் பெயரிட்டனர்.

குழந்தைக்கு வயது ஐந்தானது. கௌரி பிறவிப் பிணிக்கும், பிறவித்தளைக்கும் பயந்து தனது பிதாவை நோக்கி வணங்கி, "ஐயா இப்பிறவி நோயை நீக்க வல்ல மந்திரம் யாது?" என்று வினாவினாள். தந்தை அதிசயம் கொண்டார். பின்னர் மகிழ்ந்து உமாதேவியின் மந்திரத்தை உபதேசம் செய்தார். முற்பிறப்பில் தொட்டு விட்ட குறையைக் கௌரி அம்மந்திரத்தை நாத்தழும்பேறப் பக்தி சிரத்தையோடு ஜெபித்தும் தியானம் செய்தும் தவமிருந்தும் வந்தாள். விருபாக்கர் "நான்பெற்ற தவக்கொழுந்துக்கு தக்க கணவன் எப்போது வரப்போகிறான்" என்று நெஞ்சோடு புலம்பி வந்தான்.

கௌரிக்கு எட்டு வயதாகி விட்டது. ஒருநாள் அயலூரில் இருந்த வைணவப் பிரமச்சாரி அங்கு வந்து பிச்சை கேட்டான். விருபாக்கன், அவனுடைய குலம் கோத்திரம் எதுவும் விசாரிக்காது தனது மகள் கௌரியை அந்த வைணவப் பிரமச்சாரிக்குத் தாரை வார்த்துக் கொடுத்தான். இதனை அறிந்த உறவினர்கள் மனம் வருந்தி யாது செய்வதென வருந்தினர். பின்னர் வைணவப் பிரமச்சாரியின் குலம் கோத்திரம் ஊர் முதலியவற்றை ஆராய்ந்தபோது, "இவன் நம்மரபுக்குச் சமமாயுள்ளவன் எனினும் வைணவனென்னும் குற்றமொன்றுண்டு தானஞ்செய்தபின் இனி மறுத்தலாகாது விவாகஞ் செய்து கொடுப்பதே தகுதி" என்று இசைந்தார்கள். எவ்வாறோ ஆகம விதிப்படி சீர்வரிசையாவும் மகளுக்குக் கொடுத்து திருமணஞ்செய்தான். நல்ல நாளில் கௌரியை மணமகனது நகரத்துக்கு விருப்பாக்கன் அனுப்பி வைத்தான்.

வைணவப் பிராமணன் மணமகளோடு தன்வீட்டிற்குச் சென்றான். அவனது பெற்றோர் கௌரியின் சிவ வேடத்தைக் கண்டு நன்கு பொறாமை அடைந்தமையால் கொடுமைப் படுத்தி, அவளை ஒதுக்கி வைத்தனர். ஒருநாள் கௌரியின் மாமன் மாமி அயலூர் திருமணத்திற்குச் சென்றார்கள். கௌரியைத் தனியே அறையொன்றினுள் பூட்டி விட்டே சென்றனர்.

கௌரி சிவனடியார்களைக் காணப் பொறாமையால் மனம் மிகமிகப் புண்ணாகி இவ்வாறு சிந்திக்கலானாள், சிவனடியாரிடத்து அன்பில்லாத மனம் இரும்பு. சிவனடியாருக்கு நாள்தோறும் தொண்டு செய்யாத சரீரம் மரமாகும். காது, கண் முதலிய ஐம்பொறிகள் சிவனடியாரிடத்துச் செலுத்தாவிடத்து, அது பாவையை ஒக்கும். வேதத்தினாலே துதிக்கப்படும் சைவநெறியல்லாத நெறிகள் பிறவி நெறிகள். எல்லா உயிர்களுக்கும் உறுதியாய் உள்ளவை இம்மை, மறுமை இன்பங்களே. அவைகளைக் கொடுப்பவரும் எல்லாம் தாமேயாய் உயிருக்குயிராய் உள்ளவரும் சிவபெருமான்.

அவர் தம்மன்பர்களுக்கு மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றாலும் செய்யப்படும் பக்தி வழியே வந்தருள் செய்வார். அப்பக்திவழி நிற்பவர்களுக்குப் பிறவித் துன்பத்தை நீக்கும் பொருட்டு எடுத்த வடிவம் அவருடைய அடியாரது திருவேடமன்றோ? என்று நினைத்து கவலைப்பட்டாள்.

அப்போது கருணைக்கடலாகிய சிவபெருமான் கௌரியின் சிந்தனைகளை அறிந்து மகிழ்ந்தவராய் வயது முதிர்ந்த சிவப்பிராமண வடிவம் கொண்டார். நடுங்கும் தலை, குனிந்தசையும் திருமேனி, ஒருகையிற் பிடித்த குடை, ஒருகையில் ஊன்றும் தண்டும் பெரும் பசியுடன் கௌரி இருக்கும் வீட்டுடிற் புகுந்தார். அது கண்ட கௌரி எழுந்து உபசரித்து வணங்கி "சுவாமி உம்மை இங்கே தரிசிக்க என்ன புண்ணியம் செய்தேனோ" என்றாள். விருத்தப் பிராமணர் "பசித்து நாம் வந்தோம்" என்று கூறுதலும், கௌரி அதற்கு நம்மவர்கள் வீட்டைப் பூட்டி விட்டுச் சென்று விட்டார்கள் யாது செய்வேனென்று கூறி வருந்தினாள்.

"நீ போ கதவுப் பூட்டு திறப்படும். திறந்து விரைவாய்ச் சமை எனக் கூறினார் சிவப்பிராமணர். அவ்வாறே கௌரி பூட்டைத்தொட கதவு திறபட்டது. விரைவாகவும் வேகமாகவும் முக்கரண சுத்தியுடன் சமையல் செய்து முடித்தாள் கௌரி. பின்னர் சிவப்பிராமணரின் திருப்பாதங்களுக்குப் பாதபூசை செய்து அத்தீர்த்தத்தைத் தன் சிரசில் தெளிந்து சிறிதளவு அருந்தினாள். கண்களிலும் ஒற்றிக்கொண்டாள். அவரை உபசரித்து ஆசனத்தில் அமரச் செய்தாள். பின்னர் ஆகம விதிப்படி தலைவாழையிலை விரித்து அமுது முதலியன படைத்து தீப தூபம் காட்டி மகேஸ்வர பூசை முதலியன செய்து தோத்திர பாராயணம் செய்து வணங்கி திருவமுது செய்வித்தாள்.

விருத்தப் பிராமணர் திருவமுது செய்தருளிய பின்னர் மூப்பு, உருத்திராட்சம் வீபூதி யாவும் நீக்கிப் பதினாறு வயது இளைஞனாய் மன்மதனையும் விஞ்சிய பேரழகனாய் இரத்தினாபரணங்கள் உடையவராய் காணப்பட்டார். கற்பினிற் சிறந்த கௌரி அது கண்டு நடுநடுங்கிக் கைகளை நெரித்தவளாய் ஒதுங்கி நின்றாள்.

அப்போது திருமணத்திற்குச் சென்ற மாமன் மாமி வைணவர்கள் வந்து வீட்டுனுள்ளே புகுதலும் வாலிபனாக இருந்த எம்பெருமான் சிவசின்னம் நிறைந்த பாலகனாகி காற்பெருவிரலைச் சுவைத்துக் கண்ணீர்ததும்ப வாய்விட்டழுது கொண்டு ஆடையின் மீது கிடந்தருளினர். கௌரியினுடைய மாமன் மாமி அதுகண்டு கௌரியை நோக்கி "இக்குழந்தை ஏது?" ஏது என்று கேட்டனர். அதற்குக் கௌரி, "தத்தனுடைய மனைவி இங்கு வந்து இக்குழந்தையை அழாமல் சிறிது நேரம் பார்த்துக் கொள்ளென்று கிடத்திவிட்டுப் போனாள்" என்று கூறினாள். இவ்வாறு கௌரி கூறமுன், மாமனும் மாமியும் கண்கள் சிவந்து அனற்பொறி பறக்கக் கோபித்து, எலும்புகளைப்பூண்டு சுடுகாட்டில் ஆடுகின்ற சிவனிடத்தே அன்பு பூண்டவளுடைய குழந்தையின் மேலே நீ அன்பும் ஆசையும் கொண்டவளாய் விட்டமையால் நீயும் எமக்குதவாய் என்று கூறி கௌரியையும் குழந்தையையும் வீட்டைவிட்டுப் போகும்படி விரட்டினார்கள்.

தாயில்லாப் பிள்ளையுடன் கௌரி தளர்ந்த நடையுடன் தெருவில் நின்று பிள்ளை முகத்தைப் பார்த்தாள். பின்னர் சோமசுந்தரக் கடவுளைத் தனது மனசினுள்ளே தியானித்துக் கொண்டு, உமாதேவியின் மந்திரத்தை உச்சரித்தாள். அழுத குழந்தை ஆகாயத்தில் இடபவாகனமாகத் தோன்றக் கண்டாள். உமாதேவியின் மந்திரத்தைக் கௌரி தியானித்தமையால், கொளரியும் தேவர்கள் பூமாரி சொரிய ஆகாயத்திற்குச் சென்றாள். பூமியிலுள்ளவர்கள் மகிழ்ந்து ஆச்சரியம் கொண்டார்கள்.

# வைகாசிப் பூசமிதன் புகழ்பாடுவோம்

குகதேவன் பண்டிதர்

வைகாசிப் பூசமிதன் புகழினைப் பாடும்
வளர்சைவ நெறியோங்கும் வண்ணத்தைப் பாடும்
கைலைமலை யீசனடி மலரினைநாடிக்
கண்டார்புகழ் பாடும்திருத் தொண்டரைப்பாடும்.

மெய்யினிலே சிவனடியை நாடிப்பணிந்து
மேனிபுண் ணாகிவெந்து நொந்தபோதிலும்
செய்யும்சிவ தொண்டில்மூழ்கி முத்திகண்டவர்
சேவடியைப் பாடும்சேக் கிழாரையும் பாடும்.

தில்லைப்பதி ஈசனடி மலரினைநாடி
தொல்லைதீர்க்கும் அருள்நடனம் கண்டுபணிந்து
எல்லையில்லா மெய்யடியார் மேன்மையைப்பாடி
எமக்களித்த சேக்கிழார்தன் புகழினைப்பாடும்.

அருண்மொழி தேவரிவர் புகழினைப் பாடும்
அரசநீதி காத்தமுத லமைச்சரு மாகி
இருள்சூழ்ந்தும் எம்மறிவுக் கண்ணைத்திறக்கும்
இறையடியார் புகழ்பாடும் பெருமையைப்பாடும்.

செய்யும்சிவ தொண்டினுயர் பெருமையைப்பாடும்
தெய்வவருள் பெற்றவடியார் திறத்தினைப்பாடும்
உய்யும்வழி காட்டியெமக் கொளியாய் விளங்கும்
உமையழகன் தன்னடியார் பெருமையைப்பாடும்.

சுந்தரர்செய் தொண்டர்தொகை தன்னையெடுத்து
சுவைததும்ப நம்பிசெய்யந் தாதிதொடுத்து
வந்தனைசெய் மெய்யடியார் புகழும் விளங்க
வைத்தவருண் மொழித்தேவர் மதியினைப்பாடும்.

மன்னர்மகிழ் மந்திரியாய் அவையிலிருந்தும்
மாண்புபெறச் செய்யும்தொழில் வண்ணமறிந்தும்
இன்னல்தரு நூலவர்கை இருந்திடக்கண்டும்
இறைவழியைக் காட்டும்பெரிய புராணமேபாடும்.

அப்பர்மெய் வருந்தத்தொண்டு புரிந்தநிலையும்
அன்னையுமை ஞானப்பால் அளித்ததிறமும்
இப்புவியில் சுந்தரர்தாம் பிறந்தநிலையும்
இனிதுறவே பாடும்பெரிய புராணமேபாடும்.

ஊன்படைத்த கண்ணப்பன் உள்ளத்துயர்வும்
உயிர்மீனை விடுத்தவதி பத்தர்நிலையும்
தேன்மணி வாசகம்சொல் தெய்வநிலையும்
பாடும்பெரிய புராணமதில் பக்திமணம்தரும்.

என்றும்சிவ னடிமலரை நாடிவணங்கிடும்
ஏற்றமதே வாழ்விலொலி கூடிநலம்தரும்
முன்னவனாம் முக்கண்ணன் அருட்துணையாலே
முற்றுமொளி பெற்றுமகிழ் வண்ணமேபாடும்.

# நயினாதீவு நாகபூஷணி தல வரலாறு

திரு. வடிவேலு ஞானகாந்தன் அவர்கள்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வடமேற்குப் பக்கத்தே இருக்கும் தீவுக்கூட்டங்களில் தலைசிறந்த பெருமையும் வரலாறும் கொண்ட தீவு நயினாதீவாகும். இத்தீவு யாழ்ப்பாணத்தில் இருந்து 20 மைல் தொலைவில் உள்ளது. இத்தீவை அடைவதற்கு யாழ்ப்பாணத்திலிருந்து புங்குடுதீவு வந்து புங்குடுதீவிலுள்ள குறிகட்டுவான் இறங்கு துறையிலிருந்து கப்பலில் இத்தீவுக்கு பிரயாணம் செய்யலாம். மற்றொரு பாதையும் உண்டு அது ஊர்காவற்றுறை இறங்கு துறையிலிருந்து செல்லும் கப்பல் மார்க்கமாகும். நயினாதீவு ஏறக்குறைய மூன்று மைல் நீளமும் ஒரு மைல் அகலமும் கொண்ட தெய்வநலம் விளையும் அருள் பூமி ஆகும். இந்தத் தலத்தை சர்வமத சந்நிதி என்றும் அழைப்பர். இங்கு புத்தவிகாரை, முஸ்லிம்மசூதி போன்றன இருக்கிறது பல்வேறுபட்ட இன மக்களும் இங்கு வந்து வணங்கிப் போவதால் அத்தேசத்தின் ஒற்றுமையின் பெட்டகமாக விளங்கி நிற்கிறது.

இத்தீவுக்குப் பல பெயர்கள் வழங்கி வருகின்றன நாகநயினாதீவு, நாகதிவையின, மணித்தீவு, மணிபல்லவத்தீவு, ஜம்புகோலப்பட்டிணம், நாகதீவு, நயினை, நரித்தீவு, ஹார்லெம் என்பன போன்ற பெயர்கள் உண்டு ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் இங்குள்ள தீவுகள் எல்லாவற்றிக்கும் ஒவ்வொரு பெயர் வைத்தனர். நயினாதீவுக்கு ஹார்லெம் என்றும், காரைநகருக்கு அம்ஸ்ரடாம் என்றும், அனலதீக்கு றெற்றர்டாம் என்றும், புங்குடுதீவுக்கு மிடில்பேர்க் என்றும், நெடுந்தீவுக்கு டெல்ற், என்றும், ஊரகாவற்றுறைக்கு கைற்ஸ் என்றும் வேலணைக்கு லைடன் என்றும் பெயர் கொடுத்தனர் தற்போது அந்தப் பெயர்கள் அழிந்து வழக்கொழிந்து போய்விட்டது. இருந்தும் ஊரகாவற்றுறையை இப்பொழுதும் Kayts என்றே அழைக்கிரார்கள், எழுதுகிறார்கள் அத்துடன் நெடுந்தீவின் பெயரையும் DELFT என்றே எழுதி வருகிரார்கள். ஒல்லாந்தர் இலங்கையை ஆண்டகாலம் 1658 - 1796 வரையான 138 ஆண்டுகள் ஆகும். இக்காலப் பகுதியில் புரட்டஸ்தாந்து, கிறீஸ்தவமதங்களைப் பரப்பிய போதும் போத்துக்கேயரைப் போல் மக்களை துன்புறுத்தாது இருந்தனர். இன்று இலங்கையில் கொள்ளப்படும் தேசவழமைச்சட்டம், ரோமன் டச்சு சட்டம் இவர்களுடைய காலத்தில்த் தான் இவர்களால் உருவாக்கப்பட்டது. போர்த்திக்கேயரால் இடிக்கப்பட்ட இவ்வாலயம் ஒல்லாந்து ஆட்சிக்காரர்களின் ஆட்சியின் இறுதிக்காலகட்டத்தில் கி.பி 1788 இராமலிங்கர் - இராமச்சந்திரரால் கல்லால் கட்டியதாகவும் ஆண்டுக்கொருமுறை ஆனிமாதம் 10ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதி வரை இக்கோயிலில் திருவிழா நடைபெற்றதென யாழ்ப்பாணக் கச்சேரியில் உள்ள சைவக் கோயில்களின் பதிவு இடாப்பில் இக்குறிப்பு பதியப்பட்டுள்ளது.

நயினை ஸ்ரீ நாகபூசணியின் ஆதித் தொடக்ககாலம் எது என்பது முற்றுப்பெறாத ஆய்வுக்கு உரியதாகவே இருக்கிறது. இக்கோயில் தொடர்பான காத்திரமான ஆய்வு நடவடிக்கைகளில் இலங்கை அரசும் இந்துசமயத்திற்காக அரசினால் நிறுவப்பட்ட இந்துசமய அலுவல்கள் திணைக்களம் போன்றனவும்

பாராமுகமாய் இருப்பதும் வேதனைக்குரியதே. இவ்வாலய வரலாறு தொடர்பாக அங்கொன்றும் இங்கொன்றுமாக சில குறிப்புக்களை நல்லூர் சுவாமி 'ஞானப்பிரகாசர், நயினை திரு. க. இராமச்சந்திரன், டாக்டர் போல் பீரிஸ், டாக்டர் பரணவித்தன, முதலியார் இராசநாயகம், திரு. எஸ். கருணாரத்ன, குலசபாநாதன், அ. சிற்றம்பலம், மயிலை சீனிவெங்கடசாமி, வித்துவான் மா. இராசமாணிக்கம், கி. வா. ஜகந்நாதன், அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசாமிக்குருக்கள், "வையாபாடல் வையாபுரி ஐயர், தெல்லிப்பழை ஸ்ரீ ச. குமாரசாமிக்குருக்கள், ஆத்மஜோதி நா. முத்தையா, பேராசிரியர் மா. வேதநாதன், பேராசிரியர் வி. சிவசாமி, நயினை திரு. சி. ஆ. கதிர்த்தம்பி, எஸ். பத்மநாபன் (தமிழ்நாடு), கலாநிதி சி. தில்லைநாதன், கலாநிதி சி. க. சிற்றம்பலம் நயினை, உயர்திரு. முத்துச்சுவாமிகள், வரகவி க. நாகமணிப்புலவர் ஸ்ரீலஸ்ரீ ம. அமரசிங்கப்புலவர், கவியோகி சுத்தானந்த பாரதியார், கிருபானந்தவாரியார் குன்றக்குடி அடிகளார் ஈழத்துச் சிவானந்தன் காரைக்குடி எம். செல்லக்கண்ணு ஸ்தபதியார், சிற்பசாஸ்திர வல்லுனர் எம். நரசின்மன், வித்துவான் சி. குமாரசாமி, நா. பார்த்தசாரதி (தமிழ்நாடு) போன்றோர் எழுதி உதவியுள்ளனர்.ஆனால் இவற்றில் ஆய்வுநோக்கில் எழுதியவை மிகச் சொற்பமே. பத்திநிலையில் நின்று எழுதும் பொது ஏதுக்களாதும் எடுத்துப் பொருளாலும் மிக்க சோதிக்காமல் எழுதுவதே மரபு. இருந்தும் அறிஞர் கி. வா.ஜகந்நாதன் தனது "மாலை பூண்டாமலர்" (பக்: 190) எஸ்.பத்மநாபன் 'நாகர் வழிபாடு' (கலை மகள் - டிசம்பர் 1982) லும் எழுதிய கட்டுரைகள் சில இந்தியாவில் உள்ளவர்களும் இக்கோயில் பற்றிய தொன்மையும் அருளும் எடுத்துச் சொல்லப்பட்டிருப்பது போற்றுதற்குரியது.

இக்கோயிலின் தொன்மைபற்றிய ஆதாரங்கள் இதுவரை போதியளவில் இல்லை. ஆராய்ச்சியாளர்கள் இவ்வாலய தொன்மைபற்றி நிறுவமுடியாமல் திண்டாடுவது கூட இவ்வாலயம் மிகமிகத்தொன்மைவாய்ந்தது என்பதைச் சுட்டி நிற்கின்றது. 'கோலமே நோக்கி குளிர்ந்தூதாய் கோதிதும்பி' என்னும் திருவாசக அடி இவ்வாலயத்துக்கே பொருந்தும். இக்கோயில்பற்றிய கர்ணபரம்பரைக்கதை ஒன்று (கர்ணம் - செவி, பரம்பரைஸ்ரீ - வழிவழிவருவது) மிகவும் பயபக்தியுடன் பேசப்பட்டு வருகின்றது. முன்னொரு காலத்தில் ஒரு நாகம் நயினாதீவில் உறையும் நாகபூஷணி அம்மையை வழிபட்டு வந்ததாகவும் அது வழமைபோல் அம்பாளைப் பூசிக்க பினாதீவுக்கு அருகில் இருக்கும் புளியந்தீவில் இருந்து பூக்கொய்து கொண்டு வரும் போது ஒரு கருடன் அதனைத் கொல்வதற்கு எதிர்த்து வந்தது. பாம்பும் நடுங்கி அஞ்சி கடலிலே கிடந்த ஒரு கல்லைச்சுற்றிக் கொண்டது. கொல்ல வந்த கருடனும் அதற்கு எதிரேயிருந்த கல்லில் அமர்ந்து கொண்டது. அவ்வழியே வந்த வணிகன் (மாநாய்க்கன் என்பார் சிலர்) பாம்பின் அச்சத்தை குறிப்பால் உணர்ந்து கருடனை விலகிச்செல்லுமாறு கேட்க கருடனும் உனது செல்வமனைத்தையும் நாகபூஷணி ஆலயத்துக்கு கொண்டு வந்து கொடுத்தால் நான் விலகுவேன் என்று சொன்னது. அப்படியே அவ்வணிகனும் செய்ய கருடன் விலகிச்சென்றது. வணிகன் தன் வீடு ஏகி தன் மனைவியிடத்தே நடந்ததெல்லாம் சொல்லி அம்பிகையின் பெருமையை இருவரும் போற்றி நித்திரை செய்தார்கள். அப்பொழுது ஓர் பேரொளிப் பிழம்பு அவர்கள் இல்லத்தில் தோன்ற அவர்கள்

இருவரும் கண்கள் கூசக் கூசப்பார்த்தபோது அவையனைத்தும் நாகரத்தினமாய்ப் பிரகாசித்து. அவர்கள் இருவரும் நயினைநாகபூஷணி அம்மையின் திருவருளை வியந்து அனைத்துச் செல்வம் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு நயினாதீவுக்கு யாத்திரையாக வந்து நயினாதீவில் வடகிழக்குப் பக்கத்தில் ஏழுமாட வீதிகளும் கோபுரங்களோடும் அழகுவாய்ந்த ஆலயம் எழுப்பி நயினார்பட்டர் என்ற பிராமணரையும் அழைத்து வந்து பூசைகளையும் நடத்தினார்கள். எப்பொழுதும் பாம்பு சுற்றிய கல் என்றும் கருடன் இருந்த கல் என்றும் கடலின் நடுவே இருகற்களைக் பக்தர்கள் காட்டி வருகின்றார்கள். நயினாதீவில் 'பட்டர்வளவு' என்று ஓர் இடமும் இப்போதும் இருக்கிறது. முன்பு அம்பாள் ஆலயங்களில் பட்டர்களே அனேகமாக பூசைசெய்யும் பாத்தியம் உடையவர்களாக இருக்கின்றார்கள். அபிராமிப்பட்டர் திருக்கடவூரில் இருந்தது குறிப்பிடத்தக்கது. நயினார் பட்டரும் இந்தியாவைச் சேர்ந்தவர் தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாலயம் 15000ஆம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியிருக்க வேண்டும். 11.03.1951 சேர். கந்தையா வைத்தியநாதனுடன் இவ்வாலயத்தைத் தரிசிக்க வந்த தென்னிந்திய சிற்பசாஸ்திர ஆராய்ச்சியாளர் திரு. எம். நரசிம்மன் அவர்கள் 'நயினாதீவின் மூலஸ்தானத்தில் அம்மன் உருவம் போல் இருப்பது பழைய நாகப்பிரதிஷ்டையே. இது மிகவும் தேய்ந்து அம்மன் உருவம் போலத் தெரிகிறது. இதற்குப் பின்னால் ஐந்துதலை நாகப்பிரதிஷ்டை ஒன்று உண்டு. இந்தியாவிலும் நாக வழிபாட்டிற்கே பிரத்தியேகமாகவுள்ள இவ்வளவு புராதன கோயிலைக் காண்பது அரிது. கலப்பற்ற தூய்மையான நாகவழிபாட்டுப் பணியினை நயினாதீவில் காணலாம். இந்த நாகச்சிலை பதின்னான்காயிரம் வருடப் பழமையுடையது. இந்தியா இலங்கை போன்ற இடங்களில் வேறு எங்கும் பாரக்க முடியாத பிரத்தியட்ச உருவமாக சர்ப்ப வழிபாட்டின் தொன்மைக்கருவூலமாக இது இருக்கிறது என மூலஸ்தானத்தில் உள்ள நாகக்கல்லின் காலத்தை தொல்பொருள் காலம் அறியும் கருவிகொண்டு கணித்தபின் அதிசயமும் ஆச்சிரியமும் மிக அடைந்து இக்கருத்தை வெளியிட்டுள்ளார். இவ்வம்பாள் ஆலய விமானப் புனரமைப்பு வேலையைச் செய்யவந்த காரைக்குடி திரு. எம். செல்லக்கண்ணு ஸ்தபதியார் 'மூலஸ்தான விக்கிரகத்தின் அமைப்பைப் பார்த்தால் அது ஆயிரம் வருங்களுக்கு முந்தியதாகப் புலப்படுகிறது. ஆனால் நாகப்பிரதிஷ்டை இதற்கு முன்னால் ஏற்பட்டிருக்கலாம் மூலஸ்தான விக்கிரகத்துக்குப் பின்னால் உள்ள நாகபடம் பார்க்கப் பயங்கரமாக இருக்கிறது. சீறுவது போல இருக்கிறுது' என்று 11-03-1951ம் ஆண்டு வீரகேசரிப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ளார். இந்த நாக உருவின் வால் பகுதியை அறிய அகழ்ந்து கொண்டு சென்ற போது அதன் வால்ப்பகுதி முற்றுப்பெறாது வளர்ந்து நீண்டு கொண்டு சென்றதும் குறிப்பிடத்தக்கதாகும். மூலஸ்தானத்தில் உள்ள அம்பாளின் திரு உருவம் நாக உருவும் சுயம்பு லிங்கங்கள் என்பது வெள்ளிடைமலை.

அவ்வாலயத்தை அர்ச்சுனன், இந்திரன், மணிமேகலா, தெய்வம், மணிமேகலை போன்றோர் கும்பிட்டு அருள் பெற்றுள்ளனர். கி.முன் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பாண்டவர்களில் ஒருவரான அருச்சுனன் தீர்த்தயாத்திரை செய்து கொண்டுவரும்போது இவ்வாலயத்துக்கு வந்து சித்திராங்கதையென்னும் நாககன்னிகையை மணம் முடித்ததாக மகாபாரதம் குறிப்பிடும்.

நன்றி- ஈழத்துநாகதீபம்

## சங்கரத்தை முருகமூர்த்தி ஆலய அறநெறிப் பாடசாலை 1ம் ஆண்டு விழா












சிவதொண்டன்

செல்லத்துரை சுவாமிகள் திருவடிபோற்றி

பிள்ளையார் நேரச்சுப் பதிப்பகம் நல்லூர்